பட்டா வழங்கக் கோரி

வட்டாட்சியரகத்தில் குடியேறும் போராட்டம் ஒத்திவைப்பு

செஞ்சி, செப்.19: விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், ஊரணித்தாங்கல் அருகே அரசு புறம்போக்கு நிலத்தில் குடியிருந்து வருவோருக்கு அடிப்படை வசதிகள், வீட்டுமனைப் பட்டா வழங்கக் கோரி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில், புதன்கிழமை (செப்டம்பர் 20) நடைபெறவிருந்த செஞ்சி வட்டாட்சியர் அலுவலகத்தில் குடியேறும் போராட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சமரசப் பேச்சுவார்த்தையால் ஒத்திவைக்கப்பட்டது.

செஞ்சி வட்டாட்சியர் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சமரசப் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்ட பொதுமக்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகிகள்.

செஞ்சி – திருவண்ணாமலை சாலையில் உள்ள பி.ஏரிக்கரையில் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு உயர் நீதிமன்ற உத்தரவுப்படி ஆக்கிரமிப்பு குடியிருப்புகள் அகற்றப்பட்டன. அப்போது, வீடுகளை இழந்த 20 குடும்பங்களுக்கு ஊரணித்தாங்கல் அருகே ராஜாதேசிங்கு நகரில் அரசு புறம்போக்கு நிலத்தில் வீட்டுமனைகளை செஞ்சி வருவாய்த் துறையினர் ஒதுக்கினர். வீடுகளை இழந்த குடும்பங்கள் அந்த இடத்தில் கீற்று ஓலையில் வீடுகளை கட்டி குடியிருந்து வருகின்றனர்.

இவர்கள் கடந்த 10 ஆண்டுகளாக முறையான சாலை, குடிநீர், தெரு விளக்கு உள்ளிட்ட அடிப்படை வசதிகளின்றி அவதிக்குள்ளாகி வருகின்றனர். மேலும், இந்த இடத்தை தனி நபர் ஒருவர் ஆக்கிரமிப்பு செய்து, ஊராட்சி மூலம் அடிப்படை வசதிகளை ஏற்படுத்த முற்படும்போது, அதைத் தடுத்து நிறுத்தி வருகிறார் என்றும், முறையான வீட்டு மனைப் பட்டா வழங்குவதன் மூலம் அனைத்துப் பிரச்னைகளுக்கும் தீர்வு ஏற்படும் என்றும், கடந்த 10 ஆண்டுகளாக வீட்டு மனைப் பட்டா கோரி போராடி வருகின்றனர்.

இந்த நிலையில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கக் கோரி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில், செப்டம்பர் 20-ஆம் தேதி செஞ்சி வட்டாட்சியர் அலுவலகத்தில் குடியேறும் போராட்டம் அறிவிக்கப்பட்டிருந்தது. இதனிடையே, செஞ்சி வட்டாட்சியர் அலுவலகத்தில் வட்டாட்சியர் செந்தில்குமார் தலைமையில் செவ்வாய்க்கிழமை சமரசப் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இதில், 15 தினங்களுக்குள் வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என வட்டாட்சியர் தெரிவித்ததைத் தொடர்ந்து போராட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

கூட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் செஞ்சி வட்டச் செயலர் ஏ.சகாதேவன், வழக்குரைஞர் ஆனந்தராஜ், பார்த்திபன், வேல்மாறன், செல்வராஜ், சுப்பிரமணியன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

திருவண்ணாமலையில்

நாளை தீபத் திருவிழாவுக்கான பந்தக்கால் நடும் விழா

திருவண்ணாமலை, செப்.19: திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோயில் கார்த்திகை தீபத் திருவிழாவுக்கான பந்தக்கால் நடும் விழா வியாழக்கிழமை (செப்.21) நடைபெறுகிறது.

இந்தக் கோயிலில், 2023-ஆம் ஆண்டுக்கான தீபத் திருவிழா நவம்பர் 14-ஆம் தேதி தொடங்கி நவம்பர் 30-ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

பந்தக்கால் நடும் விழா...

இந்த நிலையில், தீபத் திருவிழாவுக்கான பூர்வாங்கப் பணிகளை செய்வதற்கான பந்தக்கால் நடும் விழா வியாழக்கிழமை (செப்.21) நடைபெறுகிறது. இதையொட்டி, அதிகாலை 3.30 மணிக்கு கோயில் நடை திறக்கப்பட்டு அருணாசலேஸ்வரர், உண்ணாமுலையம்மனுக்கு சிறப்பு அபிஷேக-ஆராதனைகள் நடத்தப்படுகின்றன.

காலை 7.30 மணிக்கு மேல் 8.30 மணிக்குள் துலா லக்னத்தில் சம்பந்த விநாயகர் சந்நிதியில் சிறப்பு அபிஷேக-ஆராதனைகள் நடத்தப்பட்டு, தீபத்திருவிழாவுக்கான பந்தக்கால் நடப்படுகிறது.

இதற்கான ஏற்பாடுகளை, கோயில் இணை ஆணையர் சி.ஜோதி மற்றும் அறங்காவலர்கள், உபயதாரர்கள், பக்தர்கள் செய்து வருகின்றனர்.

இதையடுத்து, தீபத் திருவிழாவின்போது சுவாமி வீதியுலாவுக்குப் பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கு வண்ணம் தீட்டுதல், தேர்களை சீரமைப்பது போன்ற பூர்வாங்கப் பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

மின் கம்பங்களை அகற்றாமல் அமைக்கப்பட்ட வடிகால் வாய்க்கால்!

நெய்வேலி, செப்.19: கடலூர் மாநகராட்சியில் மின் கம்பங்கள் அகற்றப்படாமல் வடிகால் வாய்க்கால் அமைக்கப்பட்டது சர்ச்சையை ஏற்படுத்தியது.

கடலூர் மாநகராட்சி, திருப்பாதிரிப்புலியூரில் சரவணா நகர்-நத்தவெளி இணைப்புச் சாலையில் ரூ.2.15 கோடியில் மழைநீர் வடிகால் வாய்க்கால் அமைக்கும் பணி கடந்த ஜூன் மாதம் தொடங்கியது. இதில் பெரும்பாலான பணிகள் தற்போது முடிவடைந்துள்ள நிலையில் வாய்க்காலின் மேல் பகுதியை சிமெண்ட், ஜல்லி கலவையால் மூடும் பணி நடைபெற்று வருகிறது.

ஆனால், வடிகால் வாய்க்காலின் மையப் பகுதியில் அடுத்தடுத்துள்ள 3 மின் கம்பங்களை அகற்றாமல் பணியை முடித்தது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து அந்தப் பகுதி மக்கள் கூறியதாவது: மழைக் காலங்களில் குடியிருப்புப் பகுதியில் சூழ்ந்து நிற்கும் தண்ணீரை வெளியேற்ற வசதியாக வடிகால் வாய்க்கால் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. ஆனால், வாய்க்காலின் மையப் பகுதியில் உள்ள 3 மின் கம்பங்கள் அகற்றப்படாமல் பணி முடிவடைய உள்ளது.

கடலூர் திருப்பாதிரிப்புலியூரில் சரவணா நகர்– நத்தவெளி இணைப்புச் சாலையோரம் மின் கம்பங்களை அகற்றாமல் புதிதாக அமைக்கப்பட்டுள்ள வடிகால் வாய்க்கால்.

இதனால் மழைக் காலத்தில் வடிகாலில் அடித்துவரப்படும் குப்பைகள் மின் கம்பங்களால் அடைபட்டு தண்ணீர் வடிவது தடைபடும். வடிகால் வாய்க்கால் கட்டியும் பயனில்லாமல் போக வாய்ப்புள்ளது.

எனவே, மின் கம்பங்களை வேறு இடத்தில் மாற்றி அமைத்துவிட்டு வடிகால் வாய்க்கால் பணியை முடிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

விவசாயி வீட்டில் 20 பவுன் தங்க நகைகள் திருட்டு

விழுப்புரம், செப்.19: கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் அருகே பூட்டியிருந்த விவசாயி வீட்டில் 20 பவுன் தங்க நகைகள், ரூ.60 ஆயிரம் ரொக்கத்தை திருடிச் சென்ற மர்ம நபர்களை போலீஸார் தேடி வருகின்றனர்.

சின்னசேலம் வட்டம், நயினார்பாளையம் ஊராட்சி, பேக்காடு பகுதியைச் சேர்ந்தவர் சிவக்குமார். இவரது மனைவி தமிழ்ச்செல்வி. இவர், தனது வீட்டை செவ்வாய்க்கிழமை பூட்டிவிட்டு, விவசாயப் பணிக்கு சென்றுவிட்டார். மாலையில் வீ ட்டுக்கு திரும்பியபோது, வீட்டின் பூட்டு உடைக்கப்பட்டிருந்தது. வீட்டினுள்ளே சென்று பார்த்தபோது, பீரோவில் வைக்கப்பட்டிருந்த 20 பவுன் தங்க நகைகள், ரூ.60 ஆயிரம் ரொக்கம் ஆகியவற்றை மர்ம நபர்கள் திருடிச் சென்றிருப்பது தெரிய வந்தது.

இதுகுறித்த புகாரின்பேரில், கீழ்குப்பம் போலீஸார் வழக்குப் பதிந்தனர். மேலும், கள்ளக்குறிச்சி டி.எஸ்.பி. ரமேஷ் மற்றும் போலீஸார் நிகழ்விடம் சென்று, திருட்டு நடைபெற்ற வீட்டிலிருந்த தடயங்களைச் சேகரித்தனர்.

கஞ்சா விற்பனை: இளைஞர் கைது

விழுப்புரம், செப்.19: விழுப்புரம் மாவட்டம், கிளியனூர் அருகே கஞ்சா விற்றதாக இளைஞரை போலீஸார் செவ்வாய்க்கிழமை கைது செய்தனர்.

கிளியனூர் போலீஸார் அங்குள்ள பெருமாள் கோயில் பகுதியில் செவ்வாய்க்கிழமை ரோந்துப் பணியில் ஈடுபட்டனர். அப்போது, அங்கு சந்தேகிக்கும்படி நின்றிருந்த இளைஞரைப் பிடித்து விசாரித்தபோது, கிளியனூர் கூத்தாண்டவர் கோவில் தெருவைச் சேர்ந்த மூர்த்தி மகன் ஐயப்பன் (27) என்பதும், கஞ்சாவை பதுக்கி வைத்து விற்பனை செய்ததும் தெரிய வந்தது.

தொடர்ந்து, கிளியனூர் போலீஸார் வழக்குப் பதிந்து, ஐயப்பனை கைது செய்தனர். மேலும், அவரிடமிருந்த ஒரு கிலோ 100 கிராம் கஞ்சா, ரூ.32 ஆயிரம் ரொக்கம், எடைபோடும் இயந்திரம் ஆகியவற்றையும் போலீஸார் பறிமுதல் செய்தனர்.

காரில் சாராயம் கடத்திய மூவருக்கு தலா 2 ஆண்டுகள் சிறை

விழுப்புரம், செப்.19: விழுப்புரம் அருகே சாராயம் கடத்திய மூன்று பேருக்கு தலா 2 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து, விழுப்புரம் நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை தீர்ப்பளித்தது.

விழுப்புரம் மது விலக்கு அமல் பிரிவு போலீஸார் கடந்த 2016-ஆம் ஆண்டில் திண்டிவனம் அருகிலுள்ள ஆசூர் பகுதியில் வாகனத் தணிக்கை நடத்தினர். அப்போது, புதுச்சேரியிலிருந்து அதிவேகமாக வந்த காரை நிறுத்தி சோதனையிட்டபோது, 500 லிட்டர் சாராயம் கடத்தி வந்தது தெரிய வந்தது.

இதைத் தொடர்ந்து, காரிலிருந்த மூவரிடம் போலீஸார் விசாரித்ததில், பாளையத்தைச் சேர்ந்த ராஜா (42), ஆசூரைச் சேர்ந்த கார்த்தீபன் (40), மாரி (எ) அய்யப்பன் (45) என்பது தெரிய வந்தது. தொடர்ந்து, மூவரையும் கைது செய்த போலீஸார், காருடன் 500 லிட்டர் சாராயத்தையும் பறிமுதல் செய்தனர்.

இதுதொடர்பான வழக்கு விசாரணை விழுப்புரம் 2-ஆவது குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்த வழக்கில் சாட்சிகள் விசாரணை முடிவடைந்த நிலையில், வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட மூவருக்கும் தலா 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து நீதித்துறை நடுவர் அகிலா செவ்வாய்க்கிழமை தீர்ப்பளித்தார்.

SHRIRAM ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட் (முன்னர் M/s.ஸ்ரீராம் முராண்டியோட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட் என அறியப்பட்டது)
Finance **கள்ளக்குறிச்சி கிளை:** பழைய எண்.648, புதிய எண்.19C, CKT காம்ப்ளக்ஸ், கூகையூர் பஸ் நிறுத்தம் அருகில், சேலம் மெயின் ரோடு, சின்னசேலம், கள்ளக்குறிச்சி மாவட்டம் - 606201
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் விவரம்: பெயர் D.அருளானந்த், Mobile No: 97900 15587

அசையா சொத்துக்களுக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு ஸ்ரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிரிவு 13(2) உடன் வாசிக்கப்படும் விதி 8(6) உடன் கீழ், அசையா சொத்துக்களின் இ-ஏல விற்பனை அறிவிப்பு

இதன்மூலம் பொதுமக்களுக்கும், குறிப்பாக கீழ்க்கண்ட கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்களுக்கும் அறிவிப்பதாவது, ஈடுபெற்ற கடன் வழங்கியுள்ள M/s.ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட் (முன்னர் ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட் என அறியப்பட்டது) க்கு சேரவேண்டிய கடன் பாக்கியான 09.04.2021 அன்றுள்ளபடி ரூ.1,23,32,562/- (ரூபாய் ஒரு கோடியே இருபத்து மூன்று லட்சத்து முப்பத்து இரண்டாயிரத்து ஐநூற்று அறுபத்து இரண்டு மட்டும்)ஐ வசூலிப்பதற்காக கடன் வழங்கிய கம்பெனியிடம் அடமானம்/ஒப்படைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்து ஈடுபெற்று கடன் வழங்கிய M/s.ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட் (முன்னர் ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட் என அறியப்பட்டது)-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் ஆக்கப்பூர்வ கவனத்தில் எடுத்துக் கொண்டுள்ளார். அந்தச் சொத்து 27.10.2023 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை "உள்ள இடத்தில் உள்ளவாறு" மற்றும் "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" எனும் அடிப்படையில் விற்கப்படும். சொத்தின் குறைந்தபட்ச கேட்பு விலை & டே வணத்தொகை (EMD) கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

கடன்தாரர் பெயர்: திரு.M.ராஜா, S/o.திருமன்னாங்கட்டியின்னை, எண்.2/131, குளத்துமேட்டு தெரு, முருகன் கோவில் அருகில், கரடிசித்தூர் கிராமம் மற்றும் அஞ்சல், சின்னசேலம் தாலுகா, கள்ளக்குறிச்சி மாவட்டம் 606207 மற்றும் ஜாமீன்தாரர்: திரு.R.சண்முகம், திரு.Mr.ராகுல், கதவு எண்.77, கிழக்கு தெரு, JTM திருமண மஹால், கச்சிராப்பாளையம், சின்னசேலம் தாலுகா, கள்ளக்குறிச்சி மாவட்டம் - 606207. (கடன் கணக்கு எண்கள்.CHNNA708300002, CHNNA708300003). கோரிக்கை அறிவிப்பு தேதி 13(2): 08.04.2021; கவாதீனம் எடுக்கப்பட்ட தேதி 13(4): 16.06.2023.

அசையா சொத்து விபரம்

சொத்தானது திரு.M.ராஜா, S/o.திருமன்னாங்கட்டியின்னை-க்கு சொந்தமானது (விற்பனை பத்திர ஆவண எண்.1820/2015) கள்ளக்குறிச்சி - கரடிசித்தூர் பதிவு மாவட்டம், வடக்கானந்தல் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட அயன் புஞ்சை சர்வே எண்.25/18-ல் **0.58.5 ஏர்ஸ் (ஏக்கர் (1.45 சென்ட்), அயன் புஞ்சை சர்வே எண்.25/19B1-ல் 0.11.0 ஏர்ஸ் (0.27 சென்ட்), அயன் புஞ்சை சர்வே எண்.25/19B3-ல் 0.13.0 ஏர்ஸ் (0.32 சென்ட்), அயன் புஞ்சை சர்வே எண்.30/13B1-ல் 0.22.0 ஏர்ஸ் (0.54 சென்ட்) ஆகமொத்தம் ஏக்கர் 2.58 சென்ட் நிலம், அதிலுள்ள கட்டிடம்,** அதனுடன் அயன் புஞ்சை சர்வே எண்.25/18-ல் உள்ள EB இணைப்பு SC எண்.275, அதனுடன் வழிப்பாதை மற்றும் இருமருமுக வாகனம் செல்லும் உரிமை மற்றும் அதுபந்த உரிமைகள் மற்றும் அதனுடன் இணைந்த துணங்களும் பகுதிகளும். எல்லைகள்: கணின்னன் மற்றும் ராமன்-க்க சொந்தமான நிலத்திற்கு வடக்கு, காவல்காய்-க்கு தெற்கு, மாசிலாமணி, அருணாச்சலம் மற்றும் தனுக்குமார் வகையறா ஆகியோருக்கு சொந்தமான நிலங்களுக்கு கிழக்கு, ராஜா-க்கு சொந்தமான நிலத்திற்கு மேற்கு. **விலைவிபரம் ஏதும் இல்லை**

குறைந்தபட்ச கேட்பு விலை: ரூ.2,34,00,000/-; டேவணத்தொகை (EMD): ரூ.23,40,000/-; ஏல உயர்வு தொகை: ரூ.25,000/-

இ-ஏலத்தின் விதிகள் மற்றும் நிபந்தனைகள்

1. விலைக்குறிப்பீடு ஆவணத்தில் மற்றும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறை நிபந்தனைகள்படி ஏலம் நடத்தப்படும். விலைக்குறிப்பீடு சுமப்பிக்க ஏலத்தில் விடப்படும் சொத்து விபரம் அறிய / விலைக்குறிப்பீடு படிவம் பெற விரும்பும் விண்ணப்பதாரர்கள் சேவை வழங்குநர் இணையதளம் https://eauctions.samil.in-ஐ பார்க்கவும்.
2. இ ஏலம் தொடர்பான விபரங்கள், உதவிகள் பெற நடைமுறை அறிய, பயிற்சி பெற, ஆர்வமுள்ள விலைக் குறிப்பீட்டாளர்கள் தொடர்புகொள்ள வேண்டிய நபர் **திரு.அகன்ஷா நரேந்தர்வர், M/s.ஸ்ரீராம் ஆட்டோமால் இந்தியா லிமிடெட் (SAMIL), மொபைல்: 74289 93237, e-mail ID: akansha.s@cartradeexchange.com**-ஐ தொடர்பு கொள்ளவும். **மேலும் விவரங்களுக்கு திரு.கோவிந்த் மொபைல்: : 94433 15918**
3. மேற்படி தேதி / நேரத்தில் நடைபெறும் இ-ஏலத்தில் பங்கு பெற ஆர்வமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் / சொத்தினை வாங்க விரும்புவோர் தங்களது பெயரை பதிவுசெய்த (https://eauctions.samil.in) இணையதளத்தில் பதிவு செய்து உரிய ID, கடவுச்சொல்லினையும் கட்டணமின்றி பெற்றுகொள்ள வேண்டியது.
4. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு தெரிந்தவரை சொத்துக்கள் மீது வில்லங்கம் எதுவுமில்லை, எனினும், ஏலத்தில் விடப்படும் சொத்து மீதான வில்லங்கம், சொத்து உரிமை, சொத்து மீதான கோரிக்கைகள் / உரிமைகள் / பாத்தியதைகள் / செலுத்த வேண்டிய பாக்கிகள் எதுவும் உள்ளவை என்று ஆர்வமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் தங்களது விலைக்குறிப்பீட்டை சமர்ப்பிக்கும் முன் சொந்தமாக விசாரித்துத் தெரிந்து கொள்ள வேண்டியது. இந்த இ-ஏல விளம்பரம், SFL சார்பில் எந்தவித உறுதியளிப்பு / சார்பு முன்னுரிமை கொண்டதாக ஆகாது SFL-க்குத் தெரிந்த அல்லது தெரியாத மற்றும் தற்போதுள்ள / எதிர்கால வில்லங்கத்துடனே சொத்துக்கள் விற்கப்படுகின்றன. சொத்து தொடர்பான மூன்றாவது நபர் கோரிக்கைகள் / உரிமைகள் / பாக்கிகள் எதுவும் இருப்பின் அவற்றுக்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி / ஈடுபெற்று கடன் வழங்கியுள்ள இந்த நிறுவனம் பொறுப்பாகாது.
5. EMD தொகை Shriram Finance Limited என்ற பெயரில் பின்வரும் விவரங்களின் படி **RTGS / NEFT** மூலம் செலுத்த வேண்டும். வங்கியின் பெயர் - ஆக்சிஸ் பேங்க் லிட் கிளை - பாந்த்ரா - குர்லா காம்ப்ளெக்ஸ், மும்பை, வங்கி கணக்கு எண்: **230010200005265, IFSC எண்: UTIB0000230.**
6. இ-ஏலத்தில் பங்கேற்கும் ஆர்வமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள், தங்களது EMD-யைத் திரும்பெற ஏதுவாக, சொத்தின் ரிசர்வ் விலையில் 10% EMD-யைச் செலுத்தியதற்கான விவரங்களையும், PAN / AADHAR அட்டை வரியில், முகவரி, நிறுவனமாக இருப்பின் குழுத்தீர்மானம் மற்றும் முகவரிச்சான்று ஆகியவற்றின் சான்றொப்பம் பிரதிகளை **25.10.2023** அன்று அதாவது புதன்கிழமை சமர்ப்பிக்க வேண்டும். ஏல உயர்வுத் தொகை ரூ.25,000/-ஆகும்.
7. மேற்காணும் குறைந்தபட்ச (ரிசர்வ்) விலைக்கும் கீழ் சொத்து விற்கப்படமாட்டாது. வெற்றி பெற்ற விலைக்குறிப்பீட்டாளர்/ சொத்தினை வாங்கியவர், தாம்கோரிய விலையில் 25% தொகையை (EMD உட்பட) ஏலத் தேதியன்றே அதாவது **27.10.2023** அன்று வெளிஎந்திருமுன் **24.00** மணிக்குள் இங்கு காணும் வங்கிக் கணக்கு விவரங்களின்படி RTGS / NEFT மூலமாக செலுத்திட வேண்டும். அது SFL-ஆல் உறுதி செய்யப்பட வேண்டும் தவறினால், விற்பனை நிறைவேறுவதில்லை என்று கருதப்பட்டு, அதாவது EMD பறிமுதல் செய்யப்படும்.
8. இ-ஏலத்தில் வெற்றிபெறாத அனைத்து விலைக்குறிப்பீட்டாளர்களுக்கும் இ-ஏலம் முடிவுற்ற 72 மணி வேலை நேரத்திற்குள் EMD தொகை SFL-ஆல் திரும்பித்தரப்படும். அதே சமயம் EMD மீது வட்டி எதுவும் தரப்படமாட்டாது.
9. SFL-ன் அதிகாரப்பூர்வ அலுவலரால் சொத்து விற்பனை உறுதி செய்யப்பட்ட தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் தனி முடிவினால், எழுத்துமூலமாக ஒப்புக்கொண்ட நீட்டிக்கப்பட்ட தேதிக்குள் சொத்தின் மீது விற்பனை தொகையை வெற்றிபெற்ற விலைகுறிப்பீட்டாளர் செலுத்த வேண்டும். அவ்வாறு எல்லா தொகையும் முழுமையாகச் செலுத்தப்படாவிட்டால், அதுவரை, அவரால் செலுத்தப்பட்ட தொகைகள் யாவும் பறிமுதலாகும்.
10. சொத்துக்களை **18.10.2023 அன்று காலை 10.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை பார்வையிடலாம்.** மேலும் சொத்தினை பார்வையிடுதல் தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய நபர், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, **திரு.D.அருளானந்த், Mob: 97900 15587, E-mail: arulanandh.d@shriramfinance.in** மற்றும் **திரு.கோவிந்த், M/s. Shriram Automall India Limited (SAMIL), Contact Number : 9443315918, e-mail ID: govindrajan.l@samil.in** ஆகியோரைத் தொடர்புகொள்ளலாம்.
11. காரணம் எதையும் குறிப்பிடாமலும், முன்அறிவிப்பு எதுவுமின்றியும் விலைக்குறிப்பீடுகளை ஏற்க/நிராகரிக்க/ விற்முறைகளை மாற்ற, ஏலத்தை, விலைக்குறிப்பீட்டை ரத்து செய்யவுத்திவைக்க அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு உரிமையுண்டு.
12. நடப்பு சட்ட விதிகளின்படி வெற்றிபெற்ற விலைக்குறிப்பீட்டாளர் பெயருக்குச் சொத்தினை மாற்றுவது / உரிமை மாற்றித் தருவது தொடர்பான சட்டப்படியான பாக்கிகள், வரிகள், கட்டணங்கள், முத்திரைத்தாள் மற்றும் பதிவுக் கட்டணங்கள் போன்ற செலவுகளை அவரே ஏற்க வேண்டும்.
13. விற்பனை, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் உறுதி செய்யப்படுவதற்கு உட்பட்டதாகும்.
14. பாக்கியைச் செலுத்துவதற்கு பொறுப்புடைய கடன்தாரர்களும் / ஜாமீன்தாரர்களும், மேற்படி ஏல விற்பனை நடத்துவது தொடர்பாக 2002-ம் ஆண்டு கடனீட்டுச்சொத்து மீதான உரிமை அமலாக்க விதி 8(6)-ன்கீழ் அளிக்கப்படும் இந்த விற்பனை அறிவிப்பை ஓர் அறிவிப்பாகவும் கருத வேண்டும்.
15. இந்த விற்பனை, அவசியமோது திருத்தப்பட்ட 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறை நிபந்தனைகளுக்குட்பட்டது.
16. வாங்கிய சொத்தினை பதிவு செய்து கொள்வது வெற்றிபெற்ற விலைக்குறிப்பீட்டாளரின் பொறுப்பாகும். சொத்தினை பதிவு செய்வது தொடர்பான சட்டப்படியான சேவைகள், கட்டணங்கள் முத்திரைத்தாள் மற்றும் பதிவுக் கட்டணங்கள் போன்ற செலவுகளை வெற்றிபெற்ற விலைக்குறிப்பீட்டாளரே ஏற்க வேண்டும். சொத்தினை விரைவாகப் பதிவு செய்து கொள்வது அவசியம். காலதாமதம் ஏற்பட்டால் அதற்கான காரணத்தைக் குறிப்பிட்டு வேண்டுகோள் கடிதம் ஒன்றை SFL வசம் தரவேண்டும்.
17. உயர்த்தப்பட்ட விலைக்குறிப்பீட்டை அல்லது ஏதுவொரு அல்லது அனைத்து விலைக்குறிப்பீடுகளையும் ஏற்க வேண்டும் என்று அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு கட்டாயமில்லை. மேலும் காரணம் எதையும் குறிப்பிடாமல், ஏதுவொரு அல்லது அனைத்து விலைக்குறிப்பீடுகளையும் நிராகரிக்க SFL-க்கு உரிமையுண்டு. ஒருவேளை விலைக்குறிப்பீடுகள் நிராகரிக்கப்பட்டால், ஆர்வமுள்ளவர்களிடம்/விலைக்குறிப்பீட்டாளர்களிடம்/அல்லது மற்ற நபர்களிடம் நனி ஒப்பந்தத்தின் மூலம் சொத்தினை விற்பனை செய்ய அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு உட்பாடு காணப்படும்.
18. ஆர்வமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள்/விலைக்குறிப்பீட்டில் பங்கேற்போர் அல்லது அவர்களின் முறையான ஒப்புதல் பெற்ற பிரதிநிதிகள் தவிர மற்றவர்கள் வரும் ஏலத்தில் போது விற்பனை நடைமுறைகளில் போது அனுமதிக்கப்படமாட்டார்கள்.

குறிப்பு: ஈடுபெற்று கடன் வழங்கியுள்ள இந்த நிறுவனம் இந்த விற்பனை அறிவிப்பினை தனித அங்கீகல்/பதிவு அஞ்சல் மூலமாக கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள் ஆகியோருக்கு அனுப்பவுள்ளது. ஒருவேளை, யாரேனும் இந்த அறிவிப்பினை பெறவில்லையெனில் யாருக்கேனும் கிடைக்கவில்லையெனில் இந்த விற்பனை அறிவிப்பு விளம்பரம் மாற்று சேவை முறையில் வழங்கப்பட்டதாகக் கருதப்படும்.

தேதி: 14.09.2023; இடம்: கள்ளக்குறிச்சி Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, M/s.ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்

திருச்செந்தூர் நகராட்சி
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (இரு உறை முறை)
நக.எண். 1553/2023/இ1 நாள் : 14.09.2023

திருச்செந்தூர் நகராட்சி ஆணையாளர் அல்லது அவரால் அங்கீகாரம் அளிக்கப்பட்டவரால் **15வது மத்திய நிதி குழு மானியம் 2023-2024 (Tied Grant)** நிட்டத்தின் கீழ் மேற்கொள்ள மின்னணு முறையில் மட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

பணிகளின் எண்ணிக்கை –1, மொத்த மதிப்பீட்டுத்தொகை ரூ. 89.75 இலட்சம்,

ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை https://tntenders.gov.in என்ற இணையதளத்தில் மட்டும் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களையும் பெறலாம்.

ஒப்பந்தப்புள்ளி நேரம் மற்றும் நாள்:

அ)	ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் செய்தல்	05.10.2023 வரை (3.00 P.M)
ஆ)	ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல்	05.10.2023 மாலை 3.00 மணி முடிய
இ)	ஒப்பந்தப்புள்ளி திறத்தல்	05.10.2023 மாலை 3.30 மணி
ஈ)	ஒப்பந்தம் குறித்த முன் கலந்தாய்வு	27.09.2023 காலை 11.00 மணி

ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின், அதற்கு அடுத்த வேலை நாளில், அதே நேரத்தில், அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளியை எந்த விதி காரணமும் காட்டாமல் ஒதுக்கி வைக்கவோ இரத்து செய்யவோ ஆணையாளர் அலுவலருக்கு அதிகாரம் உண்டு.

செ.ம.தொ இ/ 5154 /ஒப்பந்தப்புள்ளி/2023 ஆணையாளர் திருச்செந்தூர் நகராட்சி

பரிதிவி அசெட் ரிகன்ஸ்ட்ரக்ஷன் அண்டு செக்யூரிடைசேஸன் கம்பெனி லிமிட்டெட்
PARAS
பதிவு & பெறுநிறுவன அலுவலகம் : கதவு எண் 1-55, 'ராஜா ப்ராசதமு', 4வது தளம், விங் எண் 1, மஸ்ஜித் பண்டா சாலை, கொண்டாபூர், ஹைதராபாத் - 500 084. CIN : U67120TG2007PLCO53327. தொலைபேசி : 040 - 41413333 தொலைநகல் : 040 - 41413301. மின்னஞ்சல் : co@paras.org.in வலைதளம் : www.paras.org.in

M/s. சிவக்குமார் எண்டர்ப்ரைசஸ் பிரைவேட் லிமிட்டெட் - ன் கணக்கில் உள்ள அசையா சொத்துக்களை பிணைக்காப்பு (அடமானக்கம்) விதிகள் 2002 ன் விதி 9(1) - உடன் படிக்க – பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) ன் கீழ் விற்பனை செய்வதற்காக மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் பொது மக்களுக்கும் குறிப்பாக கடன்தாரர், அடமானதாரர்கள் & ஜாமின்தாரர்களுக்கும் அறிவிக்கப்படுவதுயாதெனில், ஜாமின் பெற்று கடனளித்தவருக்கு அடமானம் செய்யப்பட்டு, M/s.